[பேரவைத் தலைவர்] [1981 ஏப்ரல் 6

(1) திரு. கே. பஞ்சாட்சரம் (எஸ். கன்னையன் மகன்)

(2) திரு. ஆறுமுகம் (சீனிவாசன் மகன்).

ஆகிய இருவரும் தற்போது பேரவைக் காவலரின் (சார்ஜன்ட்) காவலில் இருக்கிறார்கள். அவர்களது செய்கை அவை உரிமையை மீறிய செயலாகும். இதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இவருக்கு அனுமதிச் சீட்டு வழங்கியது மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பாலன் அவர்களின் பரிந்துரையின் மேல். மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் தீர்மானம் கொண்டுவருவார்கள்.

7. அரசினர் தீர்மானம்.

பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷங்கள் எழுப்பியவர்கள் மீது நடவடிக்கை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—

''இன்று (6—4—1981) பகல் சுமார் 10-25 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில கோஷங்களை எழுப்பியதற்காக உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள—

(1) சென்னை, வியாசர்பாடி, கென்னடி நகர் 474-ம் எண் வீட்டிலிருக்கும் எஸ். கன்னையனின் மகன் கே. பஞ்சாட்சரம் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்.

(2) சென்னை, வியாசர்பாடி, கென்னடி நகர் 420-ம் எண் வீட்டிலிருக்கும் திரு. சீனிவாசனின் மகன் ஆறுமுகம் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்.

பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

1981 ஏப்ரல் 6] [திரு. ச. இராச்சந்திரன்]

அவர்கள் ஒருநாள் வெறும் காவல் (simple imprisonment) தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்டமுன்வடிவு, 1981—தொடர்ச்சி.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, 1981-ஆம் ஆண்டு இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 21/1981) சட்டமன்றத்தினுடைய கூட்டுப் பொறுக்குக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பவேண்டுமென்று என்னுடைய திருத்தத்தை ஆதரித்து நான் சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். இப்போது கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவு நியாயமற்றது, பொருத்தமற்றது, உசிதமற்றது என்பதை நான் முதலிலே தெரிவிக்கக்கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டிலே அமைதியாக தொழிலாளர்களும், உழைப்பாளிகளும் மத்தியதர மக்களும் தங்கள் கோரிக்கைகளை பல இயக்கங்கள் வாயிலாகக் கொண்டுவருகிற சூழ்நிலையில் எந்த விதமான ஆத்திர மூட்டுதலும் இல்லாத காலத்திலே, அமைதிக்கு எந்தவிதமான பங்கமும் இல்லாத காலத்திலே இப்படிப்பட்ட கடுமையான ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டுவந்திருப்பது கோடிக்கணக்கான உழைப்பாளிகள் அவர்களின் உரிமைகளை அடிப்படையிலே பறிப்பதாக அமைந்திருக்கிறது.

[பிற்பகல் 12–20]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கோடிக்கணக்கான மக்கள் என்று ஏன் நான் கூறுகிறேன் என்று சொன்னால், இந்தச் சட்ட முன்வடிவிலே சொல்லப்பட்டிருக்கிறது என்னவென்றால், யார் யாருக்கு இது பொருந்